[1993 ஏப்ரல் 29

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப் பெறவேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு, திருத்தப்பெற்றபடி, ஏற்கப்பட்டது.

(ஒ) குற்றவியல் சட்டங்கள் சார்ந்த (தமிழ்நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993 ஆம் ஆண்டு குற்றவியல் சட்டங்கள் சார்ந்த (தமிழ்நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1993), மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே,

"1993 ஆம் ஆண்டு குற்றவியல் சட்டங்கள் சார்ந்த (தமிழ்நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 16/1993) *ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டி. எம். ரங்கராஜன்.

திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993 ஆம் ஆண்டு குற்றவியல் சார்ந்த தமிழ்நாடு திருத்தச் சட்டமுன்வடிவினை ஆதரித்துப் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

*27—4—1993 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

1993 ஏப்ரல் 29] [திரு. டி. எம். ரங்கராஜன்]

இன்றைக்கு, தமிழகத்தினுடைய ஒப்பற்ற தலைவியாக விளங்கிக்கொண்டிருக்கின்ற டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்திலே இருக்கின்ற திருக்கோயில்களெல்லாம் சமூக ஒற்றுமைக்கும், கூட்டுறவு மேம்படுவதற்காகவும் அவைகள் பயன்படுகின்றன என்கின்ற காரணத்தால் தான் இன்றைக்கு தமிழகத்திலே இருக்கின்ற திருக்கோயில்களிலே எல்லாம் புனருத்தாரணம் செய்து, சீரோடும் சிறப்போடும் அந்தத் திருக்கோயில்களின் நிர்வாகத்தையே தன் பொறுப்பிலே வைத்துக்கொண்டு செயல்பட்டு வந்துகொண்டு இருக்கின்றார்கள். இன்றைக்கு இந்தச் சட்டத் திருத்தமானது திருக்கோயில்களிலே எல்லாம் நடைபெறுகின்ற கோயில் சிலைகள் திருட்டை தடுப்பதற்காக கொண்டுவரப்பட்டிருக்கின்றது. இந்தச் சட்டத்திருத்தம், இந்தியத் துணைக் கண்டத்திலேயே வேறு எந்த மாநிலத்திலேயும் இல்லாதவாறு, இந்தத் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டிருப்பது, நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் திருக்கோயில்களிலே எவ்வளவு ஈடுபாடு கொண்டு இருக்கின்றார்கள் என்பதனையும் நன்றாக உணர்த்துகின்றது. அதுமட்டுமல்லாமல், இந்தச் சட்டங்களிலே சொல்லி இருப்பது, ஐ.பி.சி. 380, 411, 454, 457 இந்த நான்கு பிரிவுகளும் நன்றாகத் திருத்தப்பட்டு, திருடுகிறவருக்கு 3 ஆண்டு சிறை தண்டனையும் அதேநேரத்திலே டிரஸ்பாஸ், பகல்நேரத்திலே டிரஸ்பாஸாக இருந்தால் 10 வருடங்கள் என்றும், இரவு நேரத்திலே டிரெஸ்பாஸ் என்றால் 14 வருடம் என்றும் இன்றைக்குக் கூறப்பட்டிருக்கிறது. இந்த டிட்டெரண்ட் பனிஷ்மென்ட் மட்டும் இருந்தால் போதாது. இன்றைக்குக் கோயில் சிலைகளை திருடுபவர்களையெல்லாம் சமுதாயத்திலேயிருந்தே ஒதுக்கி வைக்கின்ற நிலையிலே அவர்களுடைய சொத்துக்கள் எல்லாம் பறிமுதல் செய்யப்பட வேண்டும் என்கின்ற கோரிக்கையை இந்த நேரத்திலே நான் வைத்துக்கொள்ள விழைகின்றேன்.

பிற்பகல் 1-50

அதே நேரத்திலே இந்த செக்ஷன்களிலே சொல்லப்பட்டு இருக்கின்ற பனிஷ்மென்ட்ஸ் அனைத்தும் கன்கரண்டாக இருந்தால் இந்தக் கோயில் சிலைகள் திருட்டைத் தவிர்க்க முடியும் என்பது உறுதிப்படுகிறது. ஆகவே, இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்த மாண்புமிகு தமிழக முதல்வரவர்களுக்கும், மாண்புமிகு சட்ட அமைச்சரவர்களுக்கும் எனது நன்றியைக் கூறி, இந்தச் சட்ட முன்வடிவினை ஆதரித்து அமைகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய ஆலோசனைகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்து, மாண்புமிகு பேரவைத் தலைவரவர்கள், இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 6 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 6 முடிய சட்ட முன் வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது,

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை.)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன் வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவை யின் முடிவுற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்.)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே,

"1993ஆம் ஆண்டு குற்றவியல் சட்டங்கள் சார்ந்த (தமிழ்நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1993) நிறைவேற்றப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்).

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு ஏற்கப்பட்டது.

10. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(எ) மாநில நூலகக் குழுவிற்கும், தமிழ்நாடு கால்நடை மற்றும் மருத்துவப் பல்கலைக் கழக நிர்வாகக் குழுவிற்கும் பேரவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறி விப்பு.

மாநில நூலகக் குழுவிற்கும், தமிழ்நாடு கால்நடை மற்றும் அறிவியல் மருத்துவப் பல்கலைக் கழக நிர்வாகக் குழு விற்கும் பேரவை உறுப்பினர்களிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களுடைய தேர்வுக்கான முறையாக நிய மிக்கப்பட வேண்டிய எண்ணிக்கை அளவிற்கே உறுப்பினர்களிட மிருந்து வேட்புத் தாள்கள் பெறப்பட்டிருக்கின்ற காரணத்தால் முறையாக வரப்பெற்ற நியமனத் தாள்களிலிருந்து கீழ்க்கண்ட உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கின்றேன்.

மாநில நூலகக்குழு உறுப்பினர்—திரு. கே. முனிவெங்கடப்பன்.

தமிழ்நாடு கால்நடை மற்றும் அறிவியல் மருத்துவப் பல் கலைக் கழக நிர்வாகக் குழு உறுப்பினர்—திரு. மா. கோவிந்தராசு.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (30—4—1993) காலை 10 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-53 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.